செய்தி வெளியீடு எண்: 02 நாள்: 01.07.2019

***தேனி மாவட்டம்,***
***மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***87 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.9,12,100/- மதிப்பிலான***
***நலத்திட்ட உதவிகளை வழங்கினார்:-***

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (01.07.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை தொடர்பான 550 மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, ஆதரவற்ற விவசாயக்கூலி உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, பட்டாகோருதல், பட்டா மாறுதல், கல்விக்கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், காவல்துறை தொடர்பான மனுக்கள், முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுதாரர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்கள் வழங்கினார்கள்.

பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களா என்பதனை உடனடியாக விசாரணை மேற்கொண்டு அவர்களுக்கு எந்தவித காலதாமதமின்றி விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு 15 நாட்களுக்குள் பதிலளிக்குமாறும், மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள் மீதும், மக்கள் குறைதீர்க்கும் நாளில் பெறப்பட்ட மனுக்கள், முன்னாள் படைவீரர் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பெறப்பட்ட மனுக்கள் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, மனுதாரர்களுக்கு உரிய காலத்தில் பதிலளிக்குமாறு துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், திருமண நிதியுதவி மற்றும் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 9 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா 8 கிராம் வீதம் 72 கிராம் தங்கத்தினையும், ரூ.3,50,000/-த்திற்கான நிதியுதவியினையும், மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உதவித்தொகையாக 51 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4,59,500/- மதிப்பிலான நிதியுதவியினையும், 12 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,500/- வீதம் பராமரிப்பு உதவித்தொகையாக ரூ.18,000/- த்திற்கான நிதியுதவியினையும், நவீன காதொலி கருவி வழங்கும் திட்டத்தின் கீழ் 15 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.84,600/- மதிப்பிலான காதொலி கருவி என மொத்தம் 87 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.9,12,100/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பா.திலகவதி, இணை இயக்குநர் (வேளாண்மை) ஜவஹரிபாய், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சகுந்தலா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செந்தில்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் இ.கார்த்திகாயினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) ஆர்.வெங்கடேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சாந்தி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**